*Registered as a News Paper* பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *peoples daily* மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 06 (22 - 09 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை 216

## பெற்றோல் இன்றி இயந்திரம் இயக்கவழி

இயந்திரத்தை இயக்குவதற்கு முன்னதாக காபறேற்றரில் உள்ள ஏயாக் கிளீனரைக் சழற்றிவிட வேண்டும். சிறு தடியில் துணியொன் றச் சுற்றி பந்தம் செய்ய வேண்டும். இதற்கு மண்ணெண்ணெய் தோய்த்துத் தீப்பற்ற வைக்க வேண்டும். பந்தத்தை காபறேற்றர் வாசலில் பிடிக்க வேண்டும். இதன் போது இப்புகை காபறேற்றரில் படும். அதன்போது இயந்திரத்தை இயங்கத் [4ஆம் பக்கம் பார்க்க]

# வாகனேரியில் 12 இராணுவம் பலி

# ஜீப்புக்கள் சேதம்; ஆயுதம் மீட்பு

## புலிகள் தரப்பில் சேதமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாகனேரியில் சிறிலங்கா இராணுவ ரோந்து அணியை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் ஒரு அதிகாரி உட்பட பன்னிரெண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரு ஜீப் வண்டிகள் அழிக்கப்பட்டன. பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டன. புலிகள் தரப்பில் எதுவித சேதமும் இல்லை.

நேற்று முன்தினம் காலை எட்டு மணியளவில் வாகனேரி என்ற இடத்தில் கொழும்பு பிரதான வீதியால் இரு ஜீப் வண்டிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் ரோந்து சென்று கொண்டிருந்த சமயம் அவர்களை வழிமறித்து விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதலை நடாத்தினர். இத்தாக்குதலில் இராணுவ அதி (4ஆம் பக்கம் பார்க்க)

## பல நவீன ஆயுதங்கள் வாகனேரியில் மீட்பு

(மட்டக்களப்பு)

வாகனேரியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது புலிகளால் பின் வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

★ ஏ. கே. எல். எம். ஜி ரக துப்பாக்கி - 1 இதற்குரிய மகசீன் - 5, லிங் - 450

★ ரி 56-2ரக துப்பாக்கிகள்-6 இதற்குரிய மகசீன் - 14

★ ரி 81 ரக துப்பாக்கிகள் - 3 இதற்குரிய மகசீன் - 11

★ ஜே. ஆர். கைக்குண்டுகள்-4

★ ஐ. எம். ரவைகள் - 575

★ புகைக்குண்டு - 1

## பிரேமதாசா ஆதரவு குலைந்து வருகிறது?

(கொழும்பு)

இலங்கை அரசியல் நிலையில் பல மாறுபாடுகள் காணப்படுவதாக பி. பி. சி. நேற்றிரவு அசன் செய்தியறிக்கையில் தெரிவித்தது.

பிரேமதாசா அதிருப்தியாளர்கள் கடந்த வெள்ளியன்று மாலைகண்டியில் நடத்தியபேரணியில் 30 ஆயிரம்பேர் கூடியிருந்தார்கள் என்றும், இலங்கை அரசியலில் முக்கிய பங்கு வகிக்கும் நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் கூட்டத்தில் காணப்பட்டார்கள் என்றும் அச்செய்தி கூறுகிறது.

இதேவேளை கடந்த சில நாட்களில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு இருந்த ஆதரவு குலைந்து வருவது (4ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் ஆபத்தான நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது

- பிரேமதாசா

(கொழும்பு)

அரசாங்கம் ஆபத்தான நிலை ஒன்றுக்கு தற்சமயம் முகம் கொடுக்க வேண்டியிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஜனாதிபதி தொடர்ந்து பேசும்போது நாட்டில் ஒழுங்கு கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதற்கும், ஊழலை ஒழிப்பதற்கும் அரசு தொடர்ந்துமுயற்சி செய்து வருவதாகவும் தெரிவித்தார். தற்போதைய அரசாங்கம் எந்த ஒரு நெருக்கடிக்கும் முகம் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும்நிலைமைகளுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கும் தன்மையுடைய நிலையில் அரசு இருப்பதாகவும் தெரிவித்தார்.

## சீன ஜெட் குண்டுவீச்சு விமானங்கள்

## மணலாற்றில் உக்கிர குண்டு வீச்சு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் அகோர விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மேற்கொண்டவண்ணமுள்ளன. சீனாவில் தயாரிக்கப்பட்ட புதிய ஜெட் குண்டு வீச்சு விமானங்கள் இத்தாக்குதலில் முக்கிய பங்கேற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இரவு பகல் வேறுபாடின்றி அணி அணியாக வரும் இச்சீன குண்டுவீச்சு ஜெட் விமானங்கள் ஒரே தடவையில் நான்கிற்கு மேற்பட்ட 50 கிலோக் குண்டுகளை வீசுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன இந்தஜெட் விமானங்களுடன் ஏனைய சீன தயாரிப்பு வை-8, வை-12 விமானங்களும் இத்தாலியத் தயாரிப்பு மாச்செட்டி விமானங்களும் தாக்குதலை நடத்தி வருவதாகவும் தெரிகிறது

இவ் விமானத் தாக்குதலினால் மணலாற்றில் காடுகள் தீப்பற்றி எரிவதாகவும் பெரும் கிணறுகள் போன்ற குழிகள் தோண்டப் பட்டுள்ளதாகவும் பெரும் மரங்கள் முறிந்து வீழ்ந்து கிடப்பதாகவும் அங்கி (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### லெப். பல்லவன் நிமல்ராஜ் அருமை, சூரியா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பள்ளித்திடல் என்னுமிடத்தில் கடந்த 18 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத் (4ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாசாவிற்கு எதிராக மேலும் ஒரு உறுப்பினர்

(கண்டி)

பிரேமதாசா அதிருப்தியாளர்நேற்றுமுன்தினம்கண்டியில் நடாத்திய கூட்டமொன்றில் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும், அரசியலில் ஈடுபாடு கொண்ட நூற்றுக்கணக்கான பிக்குகளும் கலந்துகொண்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கடைசியாக விலகிய இரு அமைச்சர்களுடன் மேலும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும் தெரியவருகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சட்ட தவறுகள் நிறைந்த சட்டமா அதிபர் யோசனை

தற்போதைய அரசியல் அமைப்பு நெருக்கடி தொடர்பாக சட்டமா அதிபர் தெரிவித்திருக்கும் அபிப்பிராயம் பாரதூரமான சட்டத்தவறுகளை கொண்டிருக்கிறது.

அவரது அபிப்பிராயம் சரியென நான் உணரவில்லை.

அத்துடன் பாராளுமன்றத்தின் உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் வரப்பிரசாதங்களின் காவலனாகிய நான் சட்டமா அதிபரின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டவனுமல்ல என்று சிறிலங்கா சபாநாயகர் எம் எச் முகமட் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

## அரசியல் நெருக்கடிக்கு சமரசத் தீர்வு?

(கொழும்பு)

அரசியல்நெருக்கடியில் சமரச முயற்சிகள் பலிக்கும் அறிகுறிகள் ஏற்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. ஐ தே கவின் இரு தரப்பாரும் நேரில் சந்தித்துப் பேச்சுகள் நடத்தலாம் என்றும் தெரிகிறது. இதனையடுத்து ஜனாதிபதிக்கு எதிரான குற்றவிசாரணை மனு பாராளுமன்றத்தின் ஒழுங்குப் புத்தகத்தில் இடம்பெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக (4ஆம் பக்கம் பார்க்க)

*"என் போராட்ட வரலாற்று சாதனைகளையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும், பூரண திருப்தியும் அடைகின்றேன்"*

— திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## பிரேமதாசாவிற்கு ஆதரவு தருவதில்

## பௌத்த பிக்குகளிடையே அபிப்பிராய வேறுபாடுகள்

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு ஆதரவு தெரிவிப்பது தொடர்பாக எழுந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக பௌத்தபிக்குகள் பகிரங்கமாக வாக்குவாதம் செய்து சச்சரவு இட்டுக் கொண்டனர். இதனால் கூட்டமும் தடைப்பட்டது.

நேற்று முன்தினம் கொழும்பில் பிரேமதாசாவிற்கு ஆதரவு தெரிவித்து பௌத்த பிக்குகள் நடத்திய கூட்டத்திலேயே இக் குழப்ப நிலைஉருவானது.

கூட்டத்தில்உரையாற்ற தமக்கு அனுமதி வழங்கப்படாததைக் கண்டித்து சுமார் ஐம்பதுக்கும்மேற்பட்ட பிக்குகள் வெளிநடப்புச் செய்தனர் என்றும், இதனால் கொழும்பில் நடந்த பௌத்த பிக்குகளின் கூட்டம் தடைப்பட்டது என்றும் ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

## 91-ம் நாள் நினைவு அஞ்சலி

செல்வி கு. தர்சனா

(ஆசிரியர் கிளி / தர்மக்கேணி அ. த. க. பா.)

அன்னை அரவணைப்பில் 19-09-1967
ஆண்டவன் அடியில் 25-06-1991

கடமை கண்ணியமுடன்
கட்டுப்பாடும் காப்பவர் நீங்கள்!
பாடசாலையே உயிராக
பயிலும் மாணவரே நலனே எண்ணமாக
வாழ்ந்தவர் — நீங்கள் ... ...
திடீரென எம்மைப் பரிதவிக்கவிட்டு
செல்வீர்களென எண்ணவில்லை
ஏங்குகின்றோம் ... ... மீண்டும் காண
பளை.

(R/1773)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## வரி விளம்பரம்

அக்குபங்சர்
ஹோமியோபதி சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும்விரிவுரையாளரினால் நாரிப்பிடிப்பு, மூட்டுவாதம், தொய்வு, கபாலக்குத்து, தோல்வியாதிகள், நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. மேலதிக விபரங்களுக்கு: இல. 121/2 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் இல. 95 யாழ். வீதி மானிப்பாய். திருமதி சத்தியமூர்த்தி கருவேலடி லேன் கொக்குவில். (R/1770

## வீடுகளில் திருட்டு

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் திருடர் தொல்லை அதிகரித்துள்ளது. ஒரு வாரத்திற்குள் கண்ணகை அம்மன் கோயிலடிப் பகுதியில் இரண்டு வீடுகளும், மடத்து வெளிப்பகுதியில் ஒரு வீடும் உடைக்கப்பட்டு அங்கிருந்து பெறுமதியான பல பொருள்கள் களவாடிச்செல்லப்பட்டுள்ளன.

வீடுகளின் உரிமையாளர்கள் வீடுகளில் இல்லாதசமயங்களிலேயே திருடர்கள் தமது கைவரிசையைக்காட்டி வருகின்றனர். (22)

## வித்துக்கள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

எண்ணை வித்துக்களைக் கொள்வனவு செய்வதில் தமிழீழ ஆய்வுநிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

ஆமணக்கு, வேம்பு, இலுப்பை என்னுபோன்ற வித்துக்களைச் சேகரிக்கக்கூடியோர் அவற்றைச் சேகரித்துதமிழீழ ஆய்வு நிறுவனத்திடமோ அல்லது உற்பத்திக் குழுக்களிடமோ கொடுத்து அதற்கான பணத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

## 6-ம் மாத கண்ணீர்ப்பூக்கள்



வீரவேங்கை வள்ளல்
(க. குமாரச்சந்திரன்)

பூமகள் கரங்களில் 14-12-1968
விண்ணவன் தாள்களில் 28-03-1991

திதி 22-09-1991

விண்ணில் எங்கணும் உன் புகழ் முட்டுது
விடியலுக்கான பூபாளம் கேட்குது
நண்ணிய போரில் உன்னுயிர் போனதோ?
நல்லதோர் ''வள்ளலை'' நாடு இழந்ததோ?
மண்ணில் உன் வாசம் மணக்குது மணக்குது
மறவன் நீ என்றே மக்களும் கூவினர்
சிங்கள வெறியரின் சிரசைக் கொய்ய
சிறுத்தையாய் போராடி சரிந்தவன் நீ அன்றோ
மங்களம் பொங்க தமிழீழம் மலரும் — அன்று
மறவனே உனது இலட்சியம் நிறையும்

இன்று நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் இயக்க நண்பர்களையும், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குமரபுரம்,
பரந்தன்.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(R/1762)

## வீர வணக்கம்

வீரஜனனம் 19 — 11 — 1969



வீரமரணம் 16 — 09 — 1991

வலிகாமம் தாக்குதல் படைப்பிரிவு
பொறுப்பாளர்

## மேஜர் பவா

### (நாராயணன்-தனபாலன்)

தும்பளை, பருத்தித்துறை

காடென்றும் மலையென்றும் கருதிடாது
கனத்த உயிர் பெரிதென்று மதித்திடாது
நாடு காக்க வீடு விட்டு விறல் வேங்கைக் கோலம்பூண்டு
விடுதலைக்காய் தம்உயிரை தியாகம் செய்தாய்
விறல் வேங்கை தம்முன் பாடுகள் பயின்றும்
தேடரிய சுதந்திரத்தின் வீரராகி விளங்குகின்ற
மாவீரர் வரிசை தன்னில் வந்துதித்த
மாமேதை மேஜர்! பவாவே!
அருந்தமிழர் துயர் துடைக்க ஆர்வம் கொண்டு
ஆருயிரைத் துச்சமாக்கி வீரம் பூண்டு
சிங்கள இனவாத ஈனர் தம்மை தொலைக்க எண்ணி
தூக்கினாய் அன்றொரு நாள் துப்பாக்கி உன்கரத்தில்!

தமிழீழ தலைநகராம் கோட்டை தன்னில்
தமிழீழம் காப்போம் நாம் புலிகள் என்று
வாடாத வஞ்சிவகை குறித்து அன்று
கூடாரை நாட்டில் துரத்த எண்ணி
எம்நாடு எம்மண் எம்மினம் எமதுரிமை என்றே நின்று
எல்லோர்க்கும் எம்வீரம் சாற்றி நின்றாய்!

பலாலியாம் பகைவர் பாசறையில் பதுங்கும் வீரர்
உன் நாமம் கேட்டு ஒதுங்கி நின்றார்
எம்மண்ணில் தமிழீழ தடை முகாமாம்
ஆனையிறவு என்னும் நம் மண்ணில்
தாங்கரிய தலைமைப்பீடம் தாங்கி
வீங்கு புகழ் வீரவேங்கைப் புகழ்நாட்டி நின்ற
வீர வீரா
வடபுலத்தின் தாக்குதற் பிரிவு பொறுப்பேற்று நிற்கும் நாளில்
மண்மேவு மணலாற்றில் வந்திறங்கி மறைந்திருந்து
போர் செய்ய வந்த பகைவர் தாமே
உன்னாலே உயிர் குலைந்து ஓடிற்றப்பா
இவ்வீரம் இத்திறன்கள் எம்மவர்கள் எம்மினத்தார்
எம்மியக்கம் என்று போற்றும்.

(R/1771)

- நண்பர்கள்

## நினைவு கூருகின்றோம்...

1991-09-22

லெப்.ராஜா



லெப். பரமதேவா

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய தாக்குதலில் வீரமரணமெய்திய
**லெப். ராஜா** (ராமலிங்கம் பரமதேவா - மட்டக்களப்பு)
**ரவி** (தம்பையா வாமதேவன் - மகிழடித்தீவு, மட்டக்களப்பு)

1985ஆம் ஆண்டு புல்லுமலையில் சிறிலங்காப்படையின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய புல்லுமலைப் பிரதேசப் பொறுப்பாளர்
**ராஜேஷ்** (இராசையா ஜெகநாதன் - கல்முனை)

1990ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் வீரமரணமெய்திய
**லெப்.சுமன்** (முருகையா ஆனந்தன் - நல்லூர் குறுக்குவீதி, யாழ்ப்பாணம்)
**சுதர்சன்** (ஆறுமுகம் ஆனந்தராசா - கல்லூரி வீதி, இளவாலை)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் தாக்குதலால் வீரமரணமெய்திய
**மேஜர் வின்சன் / யப்பான்** (நவரத்தினம் வசந்தன் - நறுவிலடி, வல்வெட்டித்துறை)

சவளக்கடைப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது சிறிலங்காப்படையினர் மற்றும் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து தமிழ் விவசாயிகள்.

யாழ். குடாநாட்டில் சிறிலங்காப்படையினர் பரவலாக மேற்கொண்ட விமானத்தாக்குதலில் ஒட்டுமடம், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பகுதிகளில் கொல்லப்பட்ட ஒரு சிறுமி உட்பட நான்கு தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3159)

# மணலாற்றில் சிறிலங்கா பெரும் படைஎடுப்பு

# தமிழர் தாயகத்தைத் துண்டாடும் முயற்சி

தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கை இணைக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மணலாற்றுப் பிரதேசத்தில் கடந்த மூன்று வாரமாக தொடர்ச்சியான போர் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. 1983 ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் தொடங்கிய பின் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பெரும்போர் இது என இது வர்ணிக்கப்படுகின்றது.

முப்படைகளின் பலத்தையும் முழுமையாகத் திரட்டி இப்போரை நடத்திக்கொண்டிருப்பதாகவும், சகலவிதமான ஆயுதங்களையும் பிரயோகித்து வருவதாகவும் சிறிலங்காவின் இராணுவப் பேச்சாளரான கேணல் முனசிங்கா பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். 'மின்னல் தாக்குதல்' என இந்நடவடிக்கைக்குப் பெயரிட்டுள்ள சிறிலங்கா இராணுவத் தரப்பு 'மிகப் பெரும் விலைப்போர்' எனவும் இதை வர்ணித்தது.

இந்நிலையில் இப்போரை கடந்த காலத்தில் குறிப்பிடுவது போன்று ஒரு இராணுவ நடவடிக்கை என்று குறிப்பிடுவதை விட ஒரு பெரும் படை எடுப்பு என்று குறிப்பிடுவதே பொருத்தமானது. தமிழீழ மேற்கு எல்லைப் பகுதியில் நடைபெறும் ஒரு எல்லைப் போர் எனவும் கொள்ளலாம்.

### பிரதேச முக்கியத்துவம்

தமிழீழப் பிரதேசத்தில் உள்ள அடர்ந்தகாட்டுப் பகுதியில் ஒன்றான மணலாற்றுப்பிரதேசம் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் முக்கியமான தரைப்பரப்பாகும். ஒப்பீட்டு ரீதியில் ஒடுங்கிய பிரதேசமான இப்பகுதியை துண்டாடுவதன் மூலம் வடக்கு கிழக்குக்கு இடையில் உள்ள தொடர்பை துண்டித்துவிடக் கூடியதாக இருக்கும்.

தமிழர் தாயகமான வடக்குக் கிழக்குப் பிரதேசத்தைத் துண்டாடும் இத்திட்டம் நீண்ட காலமாக சிறிலங்கா பேரினவாதச் சக்திகளின் மனதில் உள்ள ஒன்றாகும். தற்பொழுது இப் பிரதேசத்தின் கரையோரப்பகுதி சிறிலங்கா சிங்கள மீனவர்களினால் ஆக்கிரமிக்கப்பட, உள்நாட்டுப் பகுதி மகாவலித் திட்ட அபிவிருத்தி நடவடிக்கை என ஆக்கிரமிக்கத்திட்டமிடப்பட்டது. இதற்கு வெலிஓயாத்திட்டம் எனப் பெயருமிடப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தமிழர் தாயகத்தின் சுமார் 75,000 ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமிக்க சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டதோடு, நிர்வாக ரீதியாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் இருந்த எல்லாத் தொடர்பையும் துண்டித்து விட திட்டமிட்டது.

ஆனால் ஆயுதப் போராட்டம் இதற்கு பெரும் தடையாக அமைந்தது. இந்நிலையில் குடியேற்றத்திட்டங்கள் பாதிக்கப்பட்டன. இந்நிலையில்தான் தற்பொழுது இராணுவ நடவடிக்கை அந்த எல்லைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் மூன்று வாரத்திற்கு மேலாக அடர்ந்த காட்டுப் பகுதியில் தொடர்ந்தும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### உடனடி நடவடிக்கைகள்

மணலாற்றுப்படை எடுப்பு உடனடித் திட்டமிட்ட ஒரு இராணுவ நடவடிக்கையல்ல. ஆனையிறவுப் பெரும் போருக்கு முன்னரே திட்டமிட்ட ஒரு போராகும். ஆனையிறவுப் போரின் போது வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதியின் கரையோரத்தில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினரின் பெரும் பகுதி இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஆயத்தமாக வைத்திருந்தவர்களேயாகும். இது முன்னரே தெரிவிக்கப்பட்டும் இருந்தது.

ஆனையிறவுப் போர் முடிந்ததும் மணலாற்றில் ஒரு பெரும்படை எடுப்பை சிறிலங்கா இராணுவத்தினர் உடன் திட்டமிடமைக்குபல காரணிகள் உந்து சக்திகளாக இருந்தன. ஆனையிறவுப் போரின் காரணமாக விடுதலைப் புலிகள் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளதாக இராணுவத்தரப்பினர் கணிப்பிட்டனர். புலிகளில் பெருமளவில் போராளிகள் உயிரிழந்ததும், காயமடைந்ததும் அவ்வாறான கணிப்பீட்டிற்கு இட்டுச் சென்றது.

இரண்டாவதாக ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக இந்தியா குற்றம் சுமத்தி வருவதும் அதன் காரணமாக இந்தியாவில் புலிகளுக்கு எதிரான அரசியல் வாதிகளால் உருவாக்கப்பட்ட உணர்வலைகளும், எதிரான பொலிஸ் நடவடிக்கைகளும் புலிகளின் விநியோக வழியைத் துண்டித்து விட்டன என்ற கருத்துமாகும்.

ஆனால் இறுதியில் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி இராணுவத்தினரை அரசியலில் இருந்து ஒதுக்கிவைக்கவும் இந் நடவடிக்கை தேவையாகவுள்ளது. இதன் காரணமாக மணலாற்றுக் காட்டுப்பகுதியில் பெரும் இழப்புக்களைச் சந்தித்த பின்னரும் இராணுவம் போரைத் தொடர்ந்தும்நடத்திக்கொண்டுள்ளது

### புலிகளின் முதல்போரல்ல

மணலாற்றுப் பகுதியில் விடுதலைப் புலிகள் எதிர்கொள்ளும் முதலாவது போரல்ல இது. 1988, 1989 ஆம்ஆண்டு காலப் பகுதியில் புலிகள் குறிப்பிடக்கூடிய நெருக்கடியில் இருந்த காலகட்டத்தில் புலிகளுக்கு எதிராக இந்தியா பெரும்எடுப்பிலான இராணுவ நடவடிக்கைகளை இப்பகுதியில் நடத்தினர்.

சுமார் 15,000க்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்ட சிறப்புப்படைப் பிரிவுகள் இப்போரில் ஈடுபடுத்தப்பட்டன. கனரக வாகனங்களும், மிக நவீன உலங்குவானூர்திகளும் பயன்படுத்தப்பட்டன. செக்மேட் I, செக்மேட் II, செக்மேட் III என இராணுவ நடவடிக்கைகள் வளர்ந்து கொண்டே சென்றன. ஆனால் இந்திய இராணுவத்தினர் வெற்றி கொள்ள முடியவில்லை.

இந்திய இராணுவத்தினர் மத்தியில் பிரபல்யமாக ஒரு கதை இருந்ததாக, 'இந்தியா ருடே' குறிப்பிட்டிருந்தது. இக்கதையில் இலங்கை வந்த இந்திய இராணுவத்தில் மேஜர் தரத்தில் உள்ள ஒருவரிடம் சிறிலங்கா இராணுவத்தில் கேணல் தரத்தில் உள்ள ஒருவர் குறிப்பிட்டாராம் 'புலிகள் கண்ணிவெடி வைப்பதில் திறமைசாலிகள், கவனம், நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு தமிழனும் விஞ்ஞானத்தில் எஸ்க்பேர்ட்' என்று. இதனை முதலில் இந்திய அதிகாரி பெரிதாக கருத்தில் கொள்ளாமல் அசட்டை செய்தாராம். ஆனால், போர் தொடங்கி நடந்து கொண்ட குறுகிய காலத்திலேயே இதனை இந்திய அதிகாரி புரிந்துகொண்டாராம். அத்தோடு மீண்டும் சிறிலங்கா இராணுவ அதிகாரியை கூப்பிட்டு ஆலோசனையும் கேட்டாராம்.

இந்த உதாரணம் மணலாற்றுப் போரில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கும் மிகவும் பொருத்தப்பாடு உடையதொன்றாகும். மணலாற்றுப் போரில் இந்திய இராணுவத்தினர் பெற்ற படிப்பினையை சிறிலங்கா இராணுவத்தினர் கற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

### சிறிலங்கா எதிர்பாராத கடும் போர்

மணலாற்றுப்படைஎடுப்பை சிறிலங்கா இராணுவத்தரப்பு நிகழ்த்தியபோது புலிகளிடம் இருந்து தொடர்ச்சியான பலமான எதிர்த் தாக்குதல் ஒன்று கிடைக்கும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. படை எடுப்பின்போது முன்னோடித் தாக்குதல் என்றுமில்லாதவாறு இரவுபகலாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

சிறிலங்கா விமானப்படையின் முழுப்பலமும் பிரயோகிக்கப்பட்டு குண்டுவீச்சுத் தாக்குதல் நடைபெற்றது. என்றுமில்லாதவாறு எறிகணை வீச்சும், பீரங்கித்தாக்குதலும் இடம்பெற்றது. தினசரி 500க்கும் மேற்பட்ட எறிகணைகள் வீசப்பட்டன. காடே அதிர்ந்தது. பெருமளவு மிருகங்களும் கொல்லப்பட்டன. காடு தீப்பற்றி எரிந்தது.

நான்குநாள் விமானப்படையின் இரவுபகல் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதலுக்குப் பிறகு யுத்தமுகம் திறக்கப்பட்டது. நித்திகைக்குளப் பகுதியில் தொடர்ச்சியான மோதல் ஏற்பட்டது. சிறிலங்கா இராணுவ அணிகளை மிக அருகில் சென்று விடுதலைப் புலிகள் எதிர்கொண்டார்கள். இராணுவத்தினர் முன்னேற்றமும் திட்டங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

போர் ஆரம்பித்த இரண்டு வாரங்களின் பின் யுத்தம் கடுமையானது ஆக, ஆக சிறிலங்கா இராணுவத்தரப்பினர் யுத்தத்தின் கடுமை பற்றிப் பேசத் தொடங்கினர். புலிகள் கடும் போர் புரிவதாகவும். புலிகள் விதைத்துள்ள கண்ணிவெடிகளால் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். அங்குலம் அங்குலமாக முன்னேற முடிகிறது புலிகள் கடும் எதிர்ப்பைக் காட்டிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்கா இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி விமர்சனம் செய்த பி.பி.ஸி. புலிகள் மணலாற்றில் ஆணி அடித்தால்போல் இராணுவத்தினரை நகரவிடாமல் தடுத்துள்ளனர் எனத் தெரிவித்தது.

போர் தீவிரமடையவும், இழப்புக்கள் அதிகரிக்கவும் இராணுவத்தினர் தமது பிரசார யுக்தியை மாற்றத் தொடங்கினர். முதலில் மணலாற்றுப்பகுதியில் காணப்படும் 10—14 க்கும் இடைப்பட்ட புலிகளின் முகாம்களைக் கைப்பற்றவே இந் நடவடிக்கை எனக் குறிப்பிட்ட இராணுவத்தரப்பினர் பின்னர் புலிகளை முகாம்களில் இருந்து வெளியே இழுத்து அழித்தலே தமது நோக்கம் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மணலாற்றுப் போர் எப்பொழுது முடிவடையும் எனத் திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது. ஆனால் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியினால் எல்லை ஓரத்தில் நடைபெறும் பெரும் போர் ஒன்று தனது முக்கியத்துவத்தை வெளியில் இழந்துள்ளது. ஆனால் இப்போர் ஏற்படுத்தும் இராணுவ, அரசியல் விளைவுகளை மட்டும் தடுத்து விட முடியாது. அத்தோடு ஆனையிறவுப் பெரும் போரின் பின்பும் இந்தியாவின் உடனான தொடர்புகள் அற்ற பின்பும் ஒரு பெரும் போர் நடத்தும் சக்தியை விடுதலைப் புலிகள் பெற்றிருக்கின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தியுள்ளது

**ஜெயா**

---

அன்னை பூபதி பொது அறிவுப் போட்டி;

## சிறப்புற நடைபெற்ற 'பரிசளிப்பு விழா'

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி பொது அறிவுப் போட்டித் தேர்வுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் 3-30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெகுசிறப்பாக நடைபெற்றது

இவ் விழாவிற்கு யாழ். மாவட்ட மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு மரிஷான் அப்பா தலைமை வகித்தார். இவ் விழாவில் வி. பு. மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து "தமிழீழ விடுதலைப் போராட்டமும் கல்வியும் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் ஆறுமுகம் அவர்கள் உரையாற்றினார். இதைத் தொடர்ந்து அன்னை பூபதி பொதுஅறிவுப் போட்டியின் நோக்கங்கள் குறித்து வி. பு ம. முன்னணியின் செயலாளர் திரு. யோகியும், பொது அறிவுப் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வினாக்கள் பற்றிய மதிப்பீட்டை யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் திரு சண்முகநாதபிள்ளை அவர்களும் வழங்கினார்கள்.

தொடர்ந்து இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வி பு. மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு கரிகாலனும், மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயாவும் வழங்கினார்கள்.

இறுதியாக தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு புரட்சிநன்றியுரை கூறினார். இவ்விழாவில் வி.பு ம. முன்னணியின் முக்கிய பிரமுகர்கள், கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். (மு)

---

## யாழ். செயலகத்தில் ஊழியர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் எழுதுவினைஞர்தரத்திலான சுமார் 62 பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

இதனால் செயலகத்தின் பல பிரிவுகள் தமது கடமைகளை பூரணமாக மேற்கொள்வதில் பல சிரமங்கள் நீண்ட நாட்களாக இருந்து வருகின்றன என்றுஅவ்வப்பிரிவுகளின் உயர் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் பல பிரிவுகளுக்கான நிர்வாக அதிகாரிகளுக்கான பதவிகளும் வெற்றிடமாக உள்ளன என்றும் இதனால் இங்கு கடமையாற்றும் சில நிர்வாக அதிகாரிகளிடம் ஒன்றுக்கு மேற்பட்ட நிர்வாகக் கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

---

## தியாகி திலீபன் நினைவு நாளில் சிரமதானம் மூலம் புனரமைப்பு

(அரியாலை)

செம்மணிக் குளத்தின் ஒரு பகுதியான திலீபன் தடாகத்தை சிரமதானம் மூலம் புனரமைக்கும் பணி இன்று நடைபெறுகின்றது. நாயன்மார் கட்டு விவசாய உற்பத்திக்குழு, அரியாலை மத்தி வடக்கு சிற்றூரவை, நாயன்மார்கட்டு சனசமூக நிலையம் என்பன இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. இதனைத் தொடர்ந்து வரும் நாட்களில் மற்றப்பகுதியான மில்லர் தடாகமும்சிரமதானம் மூலம் புனரமைக்கப்படவிருக்கின்றது இப்பணிகளில் அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக்கழகம் உட்பட பல பொதுஸ்தாபனங்கள் பங்குபற்றுகின்றன ஏற்கெனவே நாயன்மார்கட்டு குளத்தில் இருந்துசெம்மணிக்குளம் வரையிலான வாய்க்கால் பகுதிகள் திலீபனின் ஞாபகார்த்தமாக சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்தைச்சேர்ந்த திரிசாரணர்கள் திலீபன் ஞாபகார்த்தமாக சிரமதானம் மேற்கொள்ளவுள்ளனர். நாளை திங்கட்கிழமை காலை ஏழு நாற்பத்தைந்து முதல் யாழ். போதனா வைத்திய சாலையில் நடைபெறவுள்ள இச் சிரமதான நிகழ்ச்சியில் பங்கேற்கும்படி சகல சாரணர்களையும் சாரணப் பொறுப்பாளர் வேண்டியுள்ளார்.

★ ★ ★

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தைமுன்னிட்டு கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தினரும், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய இந்து மாணவ மன்றமும் இணைந்து ஸ்தல (பாத) யாத்திரை ஒன்றை மேற்கொள்கின்றனர். இந்த யாத்திரை ஊர்வலம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 30 மணியளவில் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தில் உள்ள சகல ஆலயங்களுக்கும் கூட்டுவழிபாட்டுடன் ஊர்வலமாக சென்று இறுதியில் நல்லூர் கந்தன் ஆலயத்தை சென்றடையும். அங்கு விசேட பிரார்த்தனைபூசைகள் இடம்பெறும்.

# தமிழகத்தில் புலிகள் ஆதரவாளர் தொடர்ந்தும் பெரியளவில் கைது

(சென்னை)

தர்மபுரி மாவட்டம் ஊரில் நேற்றுக்காலை புலிகளுக்கு ஆதரவாக நடக்கவிருந்த புரட்சிகர இளைஞர் அணிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த இருபது பெண்கள் உட்பட 250 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அந்தக் கூட்டத்தைப் பொலிஸார் தடைசெய்துள்ளனர்.

இதே வேளை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் சுவரொட்டிகளை ஒட்டியமைக்காகவும், ஆதரவுக் கூட்டங்களை நடாத்தியமைக்காகவும் தமிழகத்தின்பல்வேறு பகுதிகளிலும் சுமார் நூற்று முப்பத்தியாறு பேர் தமிழகப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பெரியார், திண்டுக்கல், அண்ணா, தென்னாற்காடு, தர்ம்புரி, திருச்சி, திருநெல்வேலி, கட்டப்பொம்மன், சேலம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, வட ஆற்காடு, நீலகிரி, சென்னை ஆகிய மாவட்டங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகச் சென்னையில் காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறினார். திண்டுக்கல். அண்ணா, வடமதுரை மற்றும் காணரப்பட்டி கிராமங்களில் இரண்டு வீடுகளில் பொலிஸார் சோதனை நடாத்தி இருநூற்றிக்கொண்ணூற்றிரண்டு ஜெலட்டின் குச்சிகளையும், அறுநூற்றுப்பதின்மூன்று மின்சார டிட்னேட்டர்களையும்கண்டுபிடித்ததாகவும் இது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

## காவலிலிருந்து தப்பிவிட்டாராம்

(சென்னை)

சென்னையில் ஆயுதம் தாங்கிய பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டிருந்த உதயகுமார் தப்பியோடிவிட்டார் என்று கூறப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரான இந்த இளைஞர் நேற்று முன்தினம் தப்பியோடியதாக செங்கல்பட்டு மாவட்டப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## கூட்டத்திற்கு அழைப்பு

தென்மராட்சி கோட்டக் கல்விப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கூட்டம் (23-09-91 நாளை காலை ஒன்பது மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது இதில் இப்பகுதி வர்த்தக ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆழியவளையில்

## ஐந்துபிள்ளைகளின் தந்தை இராணுவத்தால் கொலை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து ஆழியவளைக்கு வந்த இராணுவம், அங்கு வைத்து ஐந்து பிள்ளைகளின் தந்தையைக் கத்தியால் வெட்டிச் சித்திரவதை செய்து பின்னர் சுட்டுக் கொன்றுள்ளார்கள்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பகல் 11 00மணியளவில் ஆழியவளையில் நடைபெற்றுள்ளது

சுப்பிரமணியம் நாகேஸ்வரன் (வயது 40) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு கொலையுண்டவராவார்.

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கையினால் நாகர் கோயிலில் இடம்பெயர்ந்து வந்திருந்த இவர் தனது மனைவியுடனும். மாமனுடனும் தனது ஆழியவளையிலுள்ள வீட்டுக்குச் சென்றிருந்தார்

இவரது சடலம் பொது மக்களினால் நாகர்கோயிலுக்கு எடுத்துவரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது

துப்பாக்கிச் சூட்டினால் மூளை, முகம் ஆகியன சிதறிய நிலையிலும் வயிறு, கை, தலை ஆகியவற்றில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. (36)

## தீவகப் பாடசாலைகள் சில வைத்தீஸ்வராவில்

(நல்லூர்)

வேலணைக் கோட்டத்தணியைச் சேர்ந்த சில பாடசாலைகள் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலைகளாக இயங்கவுள்ளன இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வேலணை ஆத்திசூடிவித்தியாலயம், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், சின்னமடு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ளன.

இப்பாடசாலைகள் உள்ள பகுதிகளில்மக்கள்இடம்பெயர்ந்துள்ளதால் இவற்றை வேலணையில் நடாத்த முடியாதுள்ளதாக வேலணை கோத்தணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பரீட்சை முடிவுகள் செவ்வாய் கிடைக்கும்

க. பொ. த. உயர்தர 1990 ஆம் ஆண்டிற்கான பரீட்சையின் முடிவுகள் கொழும்பு கல்வித்திணைக்கள உயரதிகாரியினால் நேற்று யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களுக்குமுரிய பரீட்சையின் பெறுபேறுகள் கொண்டு வரப்பட்ட போதிலும் கிளிநொச்சி. முல்லைத்தீவு மாவட்டங்களுக்குரிய பரீட்சையின் முடிவுகள் அந்தந்த கல்வித்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளின் முடிவுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையன்று யாழ். கல்வித்திணைக்களத்தால் வெளியிடப்படலாம் என அந்த உயர் அதிகாரிகூறினார் இதற்கிடையே யாழ். மாவட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் நேற்று யாழ்ப்பாணத்திற்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டன. (43)

## பாராட்டும் வாழ்த்தும்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் அ.துரைராசா மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டமையை வாழ்த்தி வரவேற்று வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம் செய்தி ஒன்றை அவருக்கு அனுப்பிவைத்துள்ளது. சங்கம் அனுப்பியசெய்தியில் மேலும் பேராசிரியர் துரைராசா அவர்கள் தமது அறிவையும். ஆற்றலையும் எம்மண்ணிலேயே விதைக்க வேண்டும் என்ற நோக்குடன் சேவையாற்றுவதாகப் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

தியாகி திலீபன் நினைவாக

## ஊர்தி ஊர்வலமும் நினைவுக் கூட்டமும்

வடபிராந்திய தொழிற்சங்கங்களின் சம்மேளனம் இம்மாதம் 25 ஆம் திகதி புதன் கிழமை பி. ப. 2 30 மணிக்கு தியாகி திலீபனின் 4 ஆவது சிரார்த்த தினத்தையொட்டி அலங்கார ஊர்தி ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளது.

கொக்குவில் வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க அலுவலக முன்றலில் இவ்வூர்வலம் ஆரம்பமாகிக் கே கே. எஸ். வீதி வழியாகச் சத்திரச் சந்தியை அடைந்து ஆஸ்பத்திரி வீதி வழியாகச் சென்று வேம்படிச் சந்தியில் திரும்பி பருத்தித்துறை வீதியால் சென்று நல்லூரில் தியாகி திலீபனின் நினைவு ஸ்தூபியை வந்தடையும். அங்கு நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றும் இடம் பெறும்.

அனைத்து பொதுஸ்தாபனங்களின் உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்துகொள்ளும் படியும், ஊர்தி செல்லும் வழிகளில் பொது மக்கள் பூரண கும்பம் வைத்து அஞ்சலி செலுத்துமாறும் வேண்டப்படுகின்றனர்.

## திலீபன் ஞாபகார்த்த கூட்டம்

'தியாகச் செம்மல்' திலீபனின் நான்காவது நினைவு தினத்தை ஒட்டி குருநகர் கோட்டப் பாடசாலை உயர் வகுப்பு மாணவர்கள்கூட்டாக நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றை நடத்த உள்ளனர்.

இம் மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 -00 மணிக்கு குருநகர் சென் ஜேம்ஸ்மகா வித்தியாலயத்தில் நடைபெறும் மேற்படி கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் மூர் கலந்துரையாற்றுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. [21]

## ஐயாயிரம் ஆசிரியர்களை நியமிக்க அமைச்சு அனுமதி

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கான ஐயாயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு திட்டமிடல் அமைச்சு கல்வி ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளது அதே ஆண்டு முதல் பாடசாலைகளில் நியமிக்கப்படவிருக்கும் இந்த ஆசிரியர்கள் நியமனத்திற்கான அனுமதி கடந்த பதினெட்டாம் திகதி வழங்கப்பட்டது. போட்டிப் பரீட்சை மூலம் இந்த ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்

வாகனேரியில்

காரி ஒருவர் உட்பட பன்னிரண்டு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின் போது இராணுவத்தினரிடமிருந்து பல நவீன ரக ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர் இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது.

சீனஜெட்

ருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதே வேளை காட்டுமிருகங்கள் பல இறந்துள்ளதாகவும் பெருமளவு மிருகங்கள் அண்டைக் கிராமங்களுக்குள் புகுந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## 2 படை பலி; 16 பேர் காயம்

மணலாற்றுக் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 16பேர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## கலந்துரையாடல்

வடமராட்சிப் பகுதியில் கலைஞர்களுடனான கலந்துரையாடல் ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டு அவையின் வடமராட்சிப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ளனர். இன்று மாலை மூன்று முப்பது மணியளவில் மாலிச் சந்தி சின்னத்தம்பி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும் இக்கலந்துரையாடலில்கலந்துகொள்ளும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## மொரார்ஜி தேசாய் வைத்தியசாலையில்

குளியலறையில் தவறி விழுந்ததால் இடுப்பில் முறிவு ஏற்பட்ட நிலையில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் பம்பாயிலுள்ள வைத்தியசாலையொன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீரவணக்கம்

தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் லெப். பல்லவன் (மட்டக்களப்பு), நிமல்ராஜ் (அம்பாறை) ஆகிய இரு போராளிகளும், விடுதலைப் புலிகளின் உதவியாளரான அருமை என்பவரும் வீரமரணமடைந்தனர்.

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் 20-09-91 அன்று போராளியான சூரியா [யோகேஸ்வரி அம்பலவாணபிள்ளை,மூதூர்] வீரமரணமடைந்தார்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

பெற்றோல்

தொடங்க இயந்திரம் இயங்கும்.

அல்லது (ட) வடிவ உலோக குழாயின் சிறிய வாசலைச் சூடாக்க வேண்டும். இக்குழாயின் சூடான பகுதிக்குள் சில துளிகள் மண்ணெண்ணெயை விடவேண்டும். இதன் சூட்டில் மண்ணெண்ணெய் ஆவியாகும் இந்தஆவி காபரேற்றரில்படும் போது இயந்திரம் இயக்கப்படில் இயங்க ஆரம்பிக்கும். பெற்றோல் பெருமளவு விலை அதிகரித்துள்ள இக்காலச் சூழ்நிலையில் இந்த நடைமுறை இலாபகரமான செயற்பாடாகுமென்று தமிழீழ ஆய்வு நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரேமதாசா

போல் தோன்றுவதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது. வரும் செவ்வாயன்று பாராளுமன்றம் மீண்டும் கூடுவதற்கு முன் இன்னும் எத்தனைபேர் ஜனாதிபதி ஆதரவு அணியிலிருந்து விலகி அதிருப்தியாளர் பக்கம் போவார்கள் என்பதைப் பார்க்க வேண்டும் என்றார்.

அதிருப்தியாளர் ஜனாதிபதி மீது அதிகார துஷ்பிரயோகம், ஊழல், அரசியல் அமைப்புச் சட்ட மீறல் எனப் பல குற்றங்களைச் சுமத்தினாலும் மக்கள் மனதில் இருப்பது ஜனாதிபதி புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்ற குற்றச்சாட்டே என்றும் அச்செய்தி குறிப்பிடுகின்றது.

இது பற்றிப் பலர் குறை கூறுவது ஐ. தே கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். என்றாலும் ஜனாதிபதி பிரேமதாசா கிராமப்புற ஏழைமக்களுக்கு பல நல்ல திட்டங்களை நிறைவேற்றிக் கொடுதிருப்பதால் அம் மக்களிடையே அவருக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளார்கள். எனவே அடுத்த சில தினங்களில் ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் இறுதியாக முடிவெடுக்க நேரும் போது மனச்சாட்சியை விட அரசியல் இலாபக் காரணங்களே மேலோங்கும் எனத் தெரிகிறது. இவ்வாறு அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.

அரசியல்

கொண்டுவரப்பட்ட அரசியல் குற்ற விசாரணை கோரும் மனு சம்பந்தமாக ஆளும் கட்சியினுள் கிளம்பியுள்ள அரசியல் நெருக்கடிக்கு அடுத்த மூன்று நான்கு தினங்களில் சுமுகமான தீர்வொன்று காணப்பட்டு விடுமென்று மிக நம்பகரமாகத் தெரிய வருகின்றது என்றும் கொழும்பில் வெளியாகும் பத்திரிகை ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது

பிரேமதாசாவிற்கு

இத்துடன் சேர்த்து பிரேமதாசாவிற்கு எதிராக 11 எம். பி. கள் வெளிப்படையாகத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

---

## மரண அறிவித்தல்

### வீரவேங்கை தம்பி

### (பாலசுப்பிரமணியம் தேவராசா)

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்ற நேரடி மோதலில் 19-09- 1991 இல் வீரமரணமடைந்தார்.

அன்னார் திரு க பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற புனிதவதி ஆகியோரின் ஏகபுதல்வனும், எஸ் கே. இலங்காபதி (வர்த்தகர்- மல்லாகம்) எஸ் கே அம்பிகாபதி (சவுதி) ஆகியோரின் அன்பு மருமகனும். திருமதி சத்தியவதி சோமசுந்தரம், திரு திருமலகுணவதி தில்லையம்பலம், திருமதி தர்மகுணவதி கனகரட்ணம் (தேவிபுரம்) ஆகியோரின் அன்பு பெறாமகனும் ஆவார்

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் 20-09-1991 இல் நடைபெற்றன

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்

தகவல்

எஸ். கே. இலங்காபதி

(தாய் மாமன்)

(R/1772)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.